**<u>முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.</u>**

அசல் வழக்கு எண்.1001/2023 இ.ம.எண்.
எஸ்.சி.ஓ.பி.எண். நி.வே.ம.எண்.

2024 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 04-ந் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சியின் **பி.வா.சா.1**-ன் வாக்குமூலம் 1989 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின் படி திருமதி.ஜானகி, பலகை எழுத்தர் என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | குமரேசன் | வட்டம் | : | |
| த/பெ. | : | | மாவட்டம் | : | |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |

**பி.வா.சா.1 : முதல் விசாரணை**:

நான் இவ்வழக்கின் பிரதிவாதி ஆவேன். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகளை உண்மையென நேரில் அறிந்து கையெழுத்து செய்துள்ளேன். 20.02.2023 ம் தேதியிட்ட எனக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.1.** 20.02.2023 ம் தேதியிட்ட எனது மனைவி பெயருக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.2.** மேற்படி அறிவிப்பிற்கு என் சார்பாகவும், என் மனைவி சார்பாகவும் 25.02.2023 ம் தேதி அனுப்பட்ட பதில் அறிவிப்பின் அலுவலக நகல் **பி.வா.சா.ஆ.3.** யுவராஜ் என்பவரால் என் மனைவி மீது ஈரோடு குற்றவியல் நீதித்துறை நடுவர் விரைவு நீதிமன்றம் எண்.2 ல் தாக்கல் செய்யப்பட்ட **STC.No**.241/2023 காசோலை வழக்கின் புகாரின் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.4.** வெற்றிவேல் என்பவரால் என் மீது ஈரோடு குற்றவியல் நீதித்துறை நடுவர் விரைவு நீதிமன்றம் எண்.2 ல் தாக்கல் செய்யப்பட்ட **STC.No**.252/2023 காசோலை வழக்கின் புகாரின் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(மேற்படி ஆவணங்களுக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று வாதி தரப்பு வழக்கறிஞரால் ஆட்சேபணை செய்யப்பட்ட காரணத்தினால் மேற்படி பி.வா.சா.ஆ.1

முதல் பி.வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரால் மேலும் சில ஆவணங்கள் தாக்கல் செய்யவேண்டியிருப்பதாக கூறி கால அவகாசம் கோரப்பட்டதின்பேரில் முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)